
தமிழ்
ஏறுதழுவுதல்
சிலம்பாட்டம்
வில்வித்தை
மற்போர்
5ஆம் வகுப்பு
2nd Term | இயல் -2 | பாடம் -2


தமிழர்களின்
வீரக்கலைகள்
ஏறுதழுவுதல்
உரைநடை
இயல் - 2

**ஏறு தழுவல்**, **மஞ்சு விரட்டு** அல்லது **சல்லிக்கட்டு** (ஜல்லிக்கட்டு) என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றாகும்.

ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும்.

மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது, அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டு.

**சிலம்பம்** ஒரு தடியடி தமிழர் தற்காப்புக் கலை ஆகும். இது தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மை பாதுகாத்து கொள்ளுதல் என பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்பாப்புக் கலை.

முற்காலத்தில் இக்கலையை மறவர்கள் பயன்படுத்தினர். ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். (ஈட்டி, கத்தி, வாள்…). அவற்றுள் மிகவும் பழமை வாய்ந்த ஆயுதம் சிலம்பு (நிலத்தில் இருந்து ஒரு ஆளின் நெற்றி புருவம் வரையான உயரமுடைய தடி).


சிலம்பாட்டம்


வில்வித்தை

வில் விளையாட்டு என்பது அம்பினைச் செறித்துக் குறிபார்த்து எய்தல்.

வில்வித்தையினைக் கற்றுத்தரக் கை தேர்ந்த ஆசிரியர்கள் இருந்துள்ளனர்.

# வழுக்கு மரம்

ஆடவரின் உடல் திறனைச் சோதிப்பது வழுக்கு மரம் விளையாட்டு ஆகும். நன்கு வழுவழுப்பாகச் செதுக்கப்பட்ட உயரமான மரம் நடப்படும். அதனை மேலும் வழுவழுப்பாக்கப் பலவிதமான எண்ணெய்கள் திரும்பத் திரும்பத் தடவப்படும்.

மரத்தின் உச்சியில் பண முடிப்பு வைக்கப்படும். வழுக்கு மரத்தில் ஏறி அந்தப் பண முடிப்பை எடுக்கும் திறன் உள்ளவர் யார் என்பதைக் கண்டறிவதுதான் போட்டி. அவ்வளவு எளிதாக அந்தப் பண முடிப்பை எடுத்துவிட முடியாது. இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு இப்போட்டியில் கலந்து கொள்வார்கள்.

ஊர் மக்கள் அனைவரும் திரண்டு மகிழ்ச்சி ஆரவாரத்தோடு இவ்விளையாட்டைக் கண்டு களிப்பார்கள். வழுக்கு மரத்தில் ஏறிப் பண முடிப்பை எடுக்கும் இளைஞர் சிறந்த வீரராகக் கருதப்படுவார். அவருக்கு மேலும் பணமும் பாராட்டுகளும் கிடைக்கும். தெய்வ வழிபாட்டின் ஒரு பகுதியாகக் கிராமப் புறங்களில் இவ்விளையாட்டு நடத்தப்படும்.

**மற்போர்** என்பது இரண்டு ஆட்கள் ஆயுதங்கள் இல்லாமல் ஈடுபடும் ஒருவகைப் போர் அல்லது தற்காப்புக் கலை ஆகும்.

இது உலகின் பல்வேறு சமூகங்களுக்கு இடையேயும் உள்ள ஒரு கலை வடிவம். இந்திய மரபிலும், தமிழர் மரபிலும் மற்போர் சிறப்புற்று இருந்தது. "மல்:என்பதற்கு வலிமை, மற்றொழில், எனப் பொருள் வழங்குகின்றன


வீரத்தமிழன்
மற்போர்
அல்லது
மல்யுத்தம்

https://www.youtube.com/watch?v=9R8kSow4dUk

